**O.S.No.230/2018**

**PW1 :** பாப்பாத்தி (எ) ஜெயலட்சுமி தேதி 12.09.2025

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

என் தாத்தா பெயர் செல்லப்பகவுண்டர். அவருக்கு 3 ஆண் மக்கள் என்றால் சரிதான். மூத்தவர் பெயர் ரங்கசாமி என் தந்தை. அவருடைய தம்பி பெயர் முத்துசாமி கவுண்டர். கடைசி தம்பி நஞ்சப்பகவுண்டர். என் தந்தையுடன் பிறந்த சகோதரிகள் மூன்று பெயர். என் அத்தைகள் பெயர் எனக்கு ஞாபகத்தில் இல்லை. அவர்கள் மூவரும் பல வருடங்களுக்கு முன்பாக இறந்து விட்டார்கள். 1ம் பிரதிவாதி என்னுடன் பிறந்த சகோதரர். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என் சித்தப்பா முத்துசாமி கவுண்டரின் ஆண் வாரிசுகள். 4ம் பிரதிவாதி முத்துசாமி கவுண்டரின் மகள். தாவா சொத்து விவரத்தில் ஏ செட்டியூல் சொத்து பண்ணாடி தோட்டம் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். பி செட்டியூல் 1, 2 மற்றும் 3, 4 அயிட்டம் மலையாண்டி காடு. 5 ம் அயிட்டம் பெயர் நஞ்சன்காடு. ஏ செட்டியூல் வரப்பாளையம் கிராமத்தில் உள்ள சொத்துகளின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 3 ஏக்கர் இருக்கும். பி செட்டியூல் 1 முதல் 4 அயிட்ட சொத்துகள் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் மலையாண்டி காடு சுமார் 3 ஏக்கருக்குள் இருக்கும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 17 ஏக்கர். என் சித்தப்பா நஞ்சப்பகவுண்டருக்கும் என் அப்பாவிற்கும் எப்போது பாகக்கறார் ஆனது என்றால் சுமார் 30 – 40 வருடத்திற்கு முன்பு ஆனது. பண்ணாடி தோட்டத்தின் விஸ்தீரணம் எவ்வளவு இருக்கும் என்றால் 3 ½ ஏக்கர் இருக்கும். அந்த தோட்டத்திற்கு கிணற்று பாசன வசதி. அதில் மின் மோட்டார் உள்ளது. அது எந்த அயிட்ட சொத்தில் மின் மோட்டார், கிணறு உள்ளது என்று சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தற்போது மோட்டார்

இல்லை. கிணறு மட்டும் உள்ளது. மின் இணைப்பு உள்ளது. எத்தனை கிணறு உள்ளது என்றால் 2 கிணறு உள்ளது. 2 கிணற்றை பற்றிய விவரம் சொத்து விவரத்தில் இல்லை என்றால் சரிதான். மலையாண்டிகாடு பொதுவில் உள்ளது. யார் யார் கூட்டு அனுபவித்தில் இருக்கிறார்கள் என்றால் மொத்தம் 4 கூட்டு பங்குதாரர்களின் நானும் ஒருவர். மீதி 3 கூட்டு பங்குதாரர்களின் பெயர் பொங்கியாகவுண்டர் மற்றும் மகன்கள் 3 பேர். ஆறுமுககவுண்டர், அப்புகுட்டி ஆகியோர் கூட்டு பங்குதாரர்கள். அதிலும் கிணறு உள்ளது. மலையாண்டிகாட்டில் பொது கிணறு பாசன வசதி உள்ளதாக சொத்து விவரத்தில் சொல்லவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. பண்ணாடி தோட்டத்தை பொறுத்து எங்களுக்கும் என் சித்தப்பா வகையறாவிற்கும் இடையே பாகக்கறார் ஆகிவிட்டது என்றால் சரிதான். பி செட்டியூல் ஆகவில்லை. நஞ்சன்காட்டை பிரித்து ஓட்டிக்கொண்டிருந்தார்கள் என்றால் பாகப்பிரிவினை ஆகவில்லை. கிழபுறம் மேபுறம் என்று தனித்தனியாக ஓட்டிவந்தார்களா என்றால் நாங்கள் கிழபுறம் மேபுறம் இரண்டு புறமும் ஓட்டிவந்தோம். முத்துசாமி வகையறா எந்த பக்கம் ஓட்டிவந்தார்கள் என்றால் 4 பங்கில் 2 பங்கில் அவர்கள் ஓட்டி வந்தார்கள். அவர்களும் கிழபுறமும் மேபுறமும் ஓட்டி வருகிறார்கள். மொத்த விஸ்தீரணம் 14 ஏக்கர். அதற்கு பாசன வசதி இல்லை மானாவாரி பூமி. அந்த பூமி சிப்காட்டை ஒட்டி உள்ளது என்றால் சரிதான்.